# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிருஷ்ணன் | Caste | : | |
| S/o. | : | பொன்னுசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 05.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் பூலாம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் மின்சார வாரியத்தில் கம்பியாளராக வேலை செய்து 30.6.2023ல் பணி ஓய்வு பெற்றேன். நான் அரசிராமணி கிராமத்தில் உள்ள மின் பகிர்மானத்தில் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பட்டியில் கம்பியாளராக வேலை செய்து வந்தேன்.

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 2022ம் வருடம் நான் கம்பியாளராக வேலை செய்து வந்தபோது செட்டிப்பட்டியில் உள்ள துர்கையம்மன் கோவிலில் ஒரு கொலை நடந்துவிட்டதாக

கேள்விப்பட்டேன்.

சம்பவத்தன்று சம்பவ நேரத்தில் சம்பவம் நடந்த பகுதியில் மின்தடை இருந்ததா என்று என்னுடைய மேல் அதிகாரி கதிரேசன் என்பவர் என்னிடம் கேட்டார். நான் அவரிடம் அந்த நேரத்தில் மின் தடை ஏதும் இல்லை என்று கூறினேன். நான் சொன்னதை வைத்து அந்த நேரத்தில் மின் தடை இல்லை என்று உதவி பொறியாளர் கதிரேசன் சான்று கொடுத்தார். அந்த சான்றை நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கைப்பட எதுவும் எழுதி தரவில்லை என்றால் சரி. என்னுடைய மேல் அதிகாரி சான்றில் என்ன எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. சான்றை காவல்நிலையத்தில் என்னை கொடுக்க சொன்னதால் கொடுத்தேன். போலிசார் என்னை கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்மன் வந்தது அதனால் சாட்சியம் அளிக்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.